வளன் ஆய்வம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பாரதிதாசனின் குறிஞ்சித் திட்டும் தொழிலாளர் புரட்சியும்

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ்,** உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 002.

**ஆய்வுச் சுருக்கம்**

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற கூற்றிக்கு இணங்க நான்கில் மூன்றுபங்கு மக்களை ஒரு பங்கினர் ஆளத்துடிக்கும் எண்ணத்திற்கு ஏற்பட்ட அவலநிலையைப் புரட்சிக்கவிஞர் படம் பிடித்துக்காட்டியுள்ளார். மொழிப்பற்று, இனப்பற்று, தொழிலாளர் நிலை இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து உழைக்காமல் உண்பவர்களுக்கு எதிராக ஒருநாள் மாறும் என்பதை இந்தக் குறும்புதினமான குறிஞ்சித் திட்டு ஆகும்.

**அருஞ்சொற்பொருள்**

தொழிலாளர் புரட்சி - Labourer’s Revolution , கலை இலக்கியம் - Literature in Arts, ஒற்றாடல் - Detective, ஊடுருவல் - Penetration, முடியாட்சி - Monorchy மக்களாட்சி - Democracy

**முன்னுரை**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெரியாரியச் சிந்தனையும் மார்க்கசியச் சிந்தனையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர் எனலாம். இவர் தமது இலக்கியப் படைப்பாற்றகளில் பெருந்திரளான பாட்டாளி மக்களை விழிப்புறச் செய்யவும், அவர்களுக்கு உரிமை உணர்வு பெறச் செய்யவும் மேலும் தமிழ்த் தேசிய இன விடுதலைக்காகக் கிளர்ந்து எழச் செய்யும் தன்மையில் தமது படைப்புகளில் எவ்வாறு படைத்துக் காட்டியுள்ளார் என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

கலையும் இலக்கியமும், பற்றி “இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான உழைக்கும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்”.(வி.இ. லெனின், சோ‘லிச சித்தாந்தமும் கலாச்சாரமும் குறித்து. ப. 40.) “மக்கள் தொகையில் 90 சதவீதத்திற்கும் கூடுதலாயிருக்கும் தொழிலாளர், உழவர், படைவீரர், நகர சிறு

முதலாளி வர்க்கத்தினருக்கும் உரியது கலை இலக்கியம்”. (மாவோ சே. துங், ஏனாள் கலை இலக்கியக் கருத்தரங்கு உரைகள்.) என்பர் அறிஞர்.

மேலும் கலையைப் பற்றி பெரியார் ஈ. வே. ரா. வும் “கலை எனப்படுவது இனக் கொலையானால் கலையைக் கொலை செய்”. (குடி அரசு, 29.1.1933,ப.8.) இதன் வாயிலாகத் தேசிய இன எழுச்சிக்கும் விடுதலைக்கும் கலை இலக்கியம் பயன்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

புரட்சிக் கவிஞரின் படைப்பிலக்கியங்கள் இலெனின், மாவோ, பெரியார் போன்றோர் விழைந்த தன்மைகளைக் கொண்டனவாய் அமைந்துள்ளன என்பதை இந்த மூவரினைப்பற்றிய சிந்தனைகளை நன்கு அறிந்தவர்கள் புரிந்துகொள்ளவர்.

> “…. அரசு என்பது உடைமை வர்க்கத்தின் நிறுவனம், உடைமையற்ற வர்க்கத்திடமிருந்து அதைப் பாதுகாக்கவே அது இருக்கிறது”. (பிரடெரிக் எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்,(தமிழ் மொழிபெயர்ப்பு, நா. தர்மராஜன்), முன்னேற்றப் பதிப்பகம், சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது. நான்காம் பதிப்பு 1990,ப. 267.)

என அரசைப் பற்றிக் கூறுகிறார் எங்கெல்சு. இவ்வாறு உடைமை வர்க்கத்தின் நிறுவனமான அரசை உடைமையற்ற வர்க்கத்தினரான தொழிலாளர்கள் கைப் பற்ற கிளர்ந்து எழுவதையே ‘தொழிலாளர் புரட்சி’ என்ற சொற்றொடர் குறிப்பிடுகின்றது.பெரியார் ஈ.வே.ரா.,“தலைகீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சியாகும்”. (குடி அரசு, 5.2.1933, ப. 7.) என்று பொருளுரைப்பார்.

காதலா கடமையா, கடல்மேற் குமிழிகள், குறிஞ்சித் திட்டு ஆகிய மூன்று காப்பியங்களிலும் தொழிலாளர் புரட்சியை முன்வைக்கிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். முதலிரண்டு காப்பியங்களைக் காட்டிலும் குறிஞ்சித் திட்டில் மட்டுமே புரட்சிக்கான அடிப்படை, உழைப்பாளர் கட்சி வாயிலாகத் திரள்வது, கட்சிக்கான குறிக்கோள், கொடி அமைத்தல், கருத்துப் பரப்பல், அரசனையும் அயலவர் ஊடுருவலையும் அம்பலப்படுத்தல், ஒற்றாடல், பெண்கள் பேராட்டத்தில் பங்கு பெறல், புரட்சிக்கான காலக் கணிவு, புரட்சி வெல்லல் குற்றவாளிகளைத் தண்டித்தல் என முறையாக வளரத்துச் செல்கின்றார் கவிஞர். இந்த அடிப்படையில் குறிஞ்சித் திட்டு சிறந்த படைப்பாக விளங்குகிறது.

**குறிஞ்சித் திட்டின் கதைச் சுருக்கம்:**

குறிஞ்சித் திட்டு 66 பகுதிளாகப் பிரிக்கப்பட்டது. கடல் கொண்ட குமரி நாட்டில் கடல் கொள்ளால் குறிஞ்சித் திட்டு. இக்குறிஞ்சித் திட்டில் மதமில்லை மதம் பெற்ற சாதியில்லை தச்சர் ஈந்திட்ட உருவங்காட்டி மதிமாய்க்கும் கோயிலில்லை மாற்றார் படையெடுப்பில்லை தமிழர் பண்பாடே இயல்பாக வளர்ந்தோங்கித் தழைத்துள்ளது. இக்குறிஞ்சித் திட்டிற்கு முட்டாளான திரைய மன்னன் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறான். மக்கள் கருத்துக்கு மாறாக அயல் நாட்டுப் பயணம் மேற்கொள்கிறான். 50 நாட்கள் கழிந்தபின் ஆரியப் பெண்ணும் பரத்தையுமான விநோதையை ஆணுடையில் அழைத்து வருகிறான். அவ்விநோதையுடன் அவன் கூட்டத்தினரான சிவாநந்தன், சிவசம்பந்தன், சென்னைத் தமிழரான அம்புயம், தம்பிரான் அரண்மனையை விடுத்து, ஆட்சி நிர்வாகத்தைக் கவனிக்காது, நாட்டு நலத்திட்டங்களைக் கருதாது கைப்பற்ற விநோதை சூழ்ச்சி செய்கிறாள். திட்டமிட்டு படுகொலைகள் செய்கிறாள். இவளின் சூழ்ச்சிகளை வென்று முடியாட்சியை ஒழித்து குடி அரசு நிறுவ படைத்தலைவன் சேந்தன், அவன் நண்பன் செழியன், அமைச்சன் அறிவழகன், மக்கள் தலைவர்கள் வேலன், நெடுமாறன், படைத் துணைத்தலைவன் வல்லான் முதலானோர் கட்சி அமைத்துப் போராடுகின்றனர். அரசி மல்லிகையின் தோழி தாமரை பெண்படையைத் திரட்டுகிறாள். இறுதியில் புரட்சி வெல்கிறது. விநோதை வீழ்த்தப்படுகிறாள்.

**உழைப்பாளர் உழைப்பால் உருவான அரச வாழ்வு பற்றிய செய்திகள்**

இயற்கையை அடுத்து,"இயற்கையின் மூல வளங்களைச் செல்வமாக மாற்றுவது உழைப்பே ஆகும்". (பிரெடெரிக் எங்கெல்ஸ், இயற்கையின் இயக்க இயல்,ப. 278.) அவ்வுழைப்பை நல்குபவர்கள் உழைப்பாளர். இந்த உழைப்பாளரின் உழைப்பால் முதலாளிர் கொழுக்கின்றனர். முதலாளியின் பாதுகாவலனாக அமர்ந்துள்ள அரசன் பெற்றுள்ள பெருவாழ்வைப் பட்டியலிடுகிறார் புரட்சிக் கவிஞர் என்பதை,

"கட்டத் துணியளித்தார் கல்லுமுது நெல்லளித்தார்
வெட்டிக் காடெல்லாமே வீடாக்கித் தந்தார்
எருக்கு முளைக்கும் இடர்ப் பாம்பின் பல்போல்
பருக்கைக்கல் வாய்த்தும் படுபள்ளம் வாய்த்தும்முள்
முட்டும்நிலம் நேராக்கி முல்லை பரப்பியதோர்
பட்டு மெத்தை போன்ற நிழற்பாதை யளித்தார்
தரைமீது பட்டணங்கள் செல்லும்படி அமைத்தார்

வானத் தெருக்களிலே மாமுகிலின் சோலையிலே
போனேன் இதோ என்னும் புள்ளூர்தி செய்தளித்தார்
அப்போதைக் கப்போதில் ஆசையுற்ற எப்பொருளும்
தப்பாது செய்தளித்தார் தங்கள் செல்வாக்கை எல்லாம்
இந்நாட்டை நீயாள ஈந்தார் தலைமீது
பொன்முடியைச் சேர்த்துப் புகழ்ந்தார்".

(பாரதிதாசன், குறிஞ்சித் திட்டு, பாரிநிலையம், 184.பிராட்வே.சென்னை. 600 108, ஐந்தாம் பதிப்பு 1985, ப. 76.)

**செல்வத்தை வீணடித்தல் பற்றிய செய்திகள்**

கல்வி, மருத்தும் உழவு, வணிகம் முதலான நாட்டு நலத்திட்டங்களுக்குப் பொருளில்லை என அமைச்சன் முதலானோர் தன்னிடம் கூறிக் கவலைப்படவும் தான் சிறிதுகூட அது குறித்து கவலைப்படவில்லை மன்னன். விலைமதிப்பற்ற அணிகலகள் பல இருந்தும் முழுத்தொகை கொடுத்து கழுத்தணி வாங்கி விநோதையின் கழுத்திலிட்டு அழகு பார்க்கிறான். என்பதை,

"நாட்டினிலே விளைவில்லை, மழையில்லை
அரிசிவிலை நான்கு பங்கு!
கூட்டிவிட்டார் என்செய்வார்? கூலி உயர்
வாக்கிடவே சட்டம் வேண்டும்.
பாட்டாளி மக்கட்கே அதுவன்றி
அரசினரும் பணம் கொடுத்தே
காட்டிவர வேண்டும்நல் லாதரவும்:
இவைகளெலாம் கருத வில்லை.
"அரசியலின் எத்துறையும் பணமின்றி
அழிகையிலே கோயி லுக்கும்
உருவவழி பாட்டுக்கும் மதங்கட்கும்
அயலார்க்கும் உள்ள பொன்னை
வரவெண்ணிப் பாராமல் செலவிட்ட
மனப்பான்மை கொடிதே அன்றோ?" (மேலது நூல், ப. 158.)

**சாதி சமய மூடநம்பிக்கை பரப்பச் செலவழித்தல் பற்றிய செய்திகள்**

நாட்டில் மழையும் விளையுளுமின்றி மக்கள் நலிவடைந்தருக்கும் போது தொழிலாளர் கூலி உயர்வு கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும்போது நடைகெட்ட நால்வருணக் கருத்துப் பரப்பவும், கோயில் கட்டவும், திறப்பு விழா

நடத்தவும், மூடநம்பிக்கைகளைப் பரப்பவும் பொருளைத் தண்ணீரென செலவழிக்கிறான் மன்னன். இதனால் கருவூலம் பாழ்படுகிறது.என்பதை புரட்சிக்கவிஞர்,

"கோயிலைப் பெரிதாய் கட்டிக்
கொழுக்கட்டைப் பாவை வைத்து,
வாயினால் வேண்டச் செய்து,
மறையவன் தன்னை அங்கே
நாயைப்போல் குலைக்கச் சொல்லி,
நமைக்கூலி கொடுக்கச் சொன்னாள்,
ஆயவை அனைத்தும் மக்கள்
அழிவுக்கா செய்து வைத்தாள்?" (மேலது நூல், ப. 195.)

என்று குறிப்பிட்டுள்ளார்.

**மனைவி மகன் மைத்துனனை இழத்தல் பற்றிய செய்திகள்**

"மனைவியான தன்னைப் புறக்கணித்து வாழ்ந்தால் அவனைத் திருத்தக் கருதி அரசி மல்லிகை தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான். அரசனைத் தட்டிக் கேட்க வந்த மகன் இளந்திரையனையும், தமையன் திண்ணனையும் விநோதை, அப்புயத்தின் துணையுடன் வழியிலேயே நஞ்சூட்டிக் கொன்றுவிடுகிறாள்"(மேலது நூல், ப. 98-99.) மனைவி, மகன், மைத்துனன் மூவரை இழந்தது பற்றியும் கவலை கொள்ளவில்லை அரசன். இதன்மூலம் வந்தசேனை யின் சூழ்ச்சியாற்றலை விளக்குகின்றார் புரட்சிக்கவிஞர்.

**விநோதைக்கு வேண்டியவரை அலுவலில் அமர்த்திய செய்திகள்**

"வருநாளில் நாட்டைக் கையகப்படுத்தக் கருதிய விநோதை அதற்கு வாய்ப்பாக முக்கிய அலுவல்களில் தனக்கு வேண்டியவரை நியமிக்கிறாள். தன்கருத்துக்கு இசையாத ஒத்துப்போகத அறிஞர் பெருமக்களைக் கொல்கிறாள். நாளை தன்னையும் கொல்வாள் என்பதறியாது அவளுக்கு உதவுகிறான் மன்னன்" (மேலது நூல், ப. 192.)என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**முதலாளியருக்குச் சார்பாக இருத்தல் பற்றிய செய்திகள்**

மழையில்லை அதனால் விளையுமில்லை, உணவுப் பண்டங்கள் விலையோ பத்து மடங்கு ஏறிவிடுகின்றத. அதனால் கூலி உயர்வு கேட்டு ஐந்தாயிரம் பஞ்சாலைத் தொழிலாளர் முதலாளியிடம் கெஞ்சுகின்றனர். அதனால் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் கஞ்சிக்கு வழிகேட்டு

அரசனைக் காண அரண்மனைக்கு வருகின்றனர். அரசன் அங்கு இல்லாததால் அமைச்சனிடம் கூறிய செய்தியை,

“ஆவன செய்ய வேண்டும்
அரசர்பால் எடுத்துச் சொல்லி!
தாவும்எம் குழந்தைக்குக் கெல்லாம்
தாயிடம் பாலும் இல்லை!
ஓவெனக் கதறும் தாயார்
உயிர்காக்கச் சோறும் இல்லை:
சாவுண்டு மலிவாய்! நெஞ்சில்
சலிப்புண்டு வாழ்வில்” என்றார். (மேலது நூல், ப. 47.)

என்று கூறி வருந்துகின்றனர்.

இத் தொழிலாளரக்கு ஆதரவாக ஏனைய தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் மேற்கொள்கின்றனர். தரும இல்லத்தில் விநோதையிடம் கூடிக் குலவும் அரசனிடம் நேரிற் சென்று தொழிலாளர் கூலி உயர்வு கேட்க, அதற்கு அரசனின் கூற்றாகக் கவிஞர் குறிப்பிடும் போது,

“குறைபாட்டை முதலா ளிக்குக்
கூறுவேன்அவர் எண்ணத்தை
மறையாமல் உமக்குச் சொல்வேன்.
மற்றுநான் உம்க ருத்தை
நிறைவேற்ற முடிவ தில்லை.
நீங்களோ என்னைப் பற்றி
முறையற்ற வகையில் பேச
முயல்கின்றீர்!” (மேலது நூல், ப. 92.)

என முதலாளிக்குச் சார்பாகவே பேசுகிறான். அத்துடன் தன்னைப் பற்றி முறையற்ற வகையில் பேச முயல்வதாக அவர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டுகிறான். படைத்தலைவன் சேந்தனை வரவழைத்து குற்றமற்ற அத்தொழிலாளர் மீது,

“சேந்தனே, தொழிலா ளர்கள்
திடுக்கிடச் செய்கின் றார்கள்!
தீர்ந்ததென் பெருமை இந்தத்
தீயரால்! என்றன் ஆட்சி

தேய்ந்திடச் செய்வ தற்கும்
திடீரென்று தாக்கு தற்கும்
போந்தனர் தரும இல்லம்,
வருவதைப் புகன்றா ரில்லை." (மேலது நூல், ப. 94.)

என்று பழிசுமத்தி சிறையிலடைக்கச் செய்கின்றான். 'தமக்கு வாழ்வளிக்கும் தொழிலாளருக்கு உடைமையாளரான முதலாளியர் தரும் பரிசு கதவடைப்பு நடுத்தெருவில் விடல் - பட்டினிப்போட்டுக் கொல்லல். முதலாளியர் அரசு தரும் பரிசு ஆட்சிக் கவிழ்ப்புக்கான சதி கொல்ல திட்டமிடல் என்ற பழிசுமத்தலும் சிறையிலடைத்தலும் தான் என்பதைக் கண்டு கவிஞர் தெளிவுபட அறிவுறுத்துகிறார்.

**தொழிலாளருக்கு உதவுவதாக விநோதை ஏமாற்றிய செய்திகள்**

சிறைப்படுத்திய தொழிலாளரை விநோதை விருப்பப்படி பின்னாளில் விடுவிக்கும் அரசன் அவர்களுக்கு உணவிடவும் ஒப்புதளிக்கிறான். ஆனால், ஒருவேளை உணவை மட்டுமே வழங்கும் விநோதையின் செயல்பாட்டைக் குறிப்பிடும் போது,

"தொண்டர்களே! ஆலைத் தொழிலாள ரேநீவீர்
ஏன்றனுக்கும் மற்றவருக்கு கட்சிஒன் றேற்பட்டால்
என்றனையே ஆதரிக்க வேண்டுகிறறேன் உங்களை!"
(மேலது நூல், ப. 94.)

என்று தன் சார்பில் நிற்க சூழ்ச்சிவலை விரிக்கிறான், மேலும், விநோதை சேந்தனையும் ஒழித்துக் கட்டவேண்டும் என்ற சிந்தனையை,

"இன்றுள்ள ஆட்சிதனை அழித்திடத்தான்
வேண்டு மாம் இன்னும் நம்மைக்
கொன்றிடதான் வேண்டுமாம் சேந்தனிது
கூறுகிறான் அன்பின் ஆர்ப்பே!
எனறுமே இங்கிருந்து மக்களைக்காத்
திட வேண்டும் என நினைத்தேன்
ஒன்றந்தச் சேந்தன்செத் திடவேண்டும்
அல்லது நான் சாக வேண்டும்!" (மேலது நூல், ப. 153.)

மேற்கண்ட செய்திகளின் வாயிலாக விநோதையின் செயல்கள் தொழிலாளரைப் போராட்ட நோக்கத்திலிருந்து திசை திருப்பவும், ஏமாற்றவுமேஎன்பது தெள்ளத்தெளிவு. மேலும், இன்றைய அரசியல் சூழலுக்கு இது பொருந்தும்.

வேந்தன் தன் கடமையை மறந்தால் விநோதைகள் தாமே ஆட்சிக்குக்கு வரத்துடிப்பர் என்பது இக்காலத்திற்குச் சாலபொருந்தும் என்பது தெளிவு.

**தொழிலாளர் புரட்சிப் பற்றிய செய்திகள்**

உழைப்பாளர்களான தொழிலாளர் கூலி உயர்க்கென நடத்தும் போராட்டம் முதலாளிய “விளைவுகளை எதிர்த்து நடத்தும் போராட்டாகுமே தவிர விளைவுகளுக்கான காரணங்களை எதிர்த்தல்ல” (காரல் மார்க்ஸ், கூலி, விலை, லாபம், பக் 90-91.) என்று குறிப்பிடுள்ளார் மார்ச்சு. ஆகையினால்,“கூலி அமைப்பு முறை ஒழிக என்ற முழக்கத்தைக் கொடியில் பொறித்துக்கொண்டு கிளர்ந்தெழ வேண்டும்”. என்றும் அவரே வலியுறுத்துவதையும் அறியமுடிகிறது.

தனித்தனி முதலாளியரை எதிர்ப்பதாக இல்லாமல் முதலாளியரைப் பாதுகாக்கும் அரசைத் தொழிலாளர் கைப்பற்றுதாலேயே இக்கூலி அமைப்பு முறையை ஒழிக்கமுடியும்.

**கட்சிக் கொள்கை மற்றும் கொடி அமைத்தல் பற்றிய செய்திகள்**

அயல்நாட்டுக்காரியான விநோதை குறிஞ்சித் திட்டின் ஆட்சியைக் கைப்பற்றாமல் தடுக்கவும், முடியாட்சியால் ஏற்படும் தீமைகளைக் களைந்து தொழிலாளர் ஆட்சியான குடியரசை நிறுவவும், நாட்டுப்பற்றும் தொழிலாளர் நலனும் கருதும் படைத்தலைவன் சேந்தன் முயல்கிறான். தன் கருத்தை ஒத்தவர்களான அமைச்சன் அறிவழகன், தோழன் செழியன், படைத்துணைத் தலைவன் வல்லான் முதலானோர்களை இலவந்தோப்பில் ஒன்று திரட்டுகிறான்.

விநோதையையும், அவள் கூட்டத்தையும், அவர்களால் உருவாக்கப்பட்ட கோவிலையும் தகர்க்க வேண்டும். பழைய தீங்குகள் வராவண்ணம் தடுக்கவும் குடியரசு நிறுவ வேண்டும் எனவும், செழியன் உணர்வு பொங்கக் கூறுகிறான். இதனைக் கேட்ட பெரும்பான்மை மக்கள் இவர்களின் செயல் சரியென்று ஏற்கொள்ளவேண்டும் தொழிலாளரை ஒடுக்க அரசுக்கு உதவும் படைவீரர்கள் தொழிலாளர் குடும்பங்களிலிருந்து சென்றவர்தாம், அப்படைவீரர் முதலானவர் தெளிவுபெறவும் அவர்கள் அரசுக்கு எதிராகத் திரும்ப அவர்களிடையே சரியான கருத்துக்களைப் பரப்பவேண்டும். மேலும், திட்டமில்லாமல் எதிரியுடன் மோதுவது காரிருளில் கண்ணில்லாதான் மோதுவது போல் பயனின்றிப் போகும் ஆதலால் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். என்பதை,

“….. திட்டம் ஒன்றை
ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் திட்டம் இன்றி
மோதுவது காரிருளில் கண்ணில் லாதான்

மோதுவதாய் முடியும்" (பாரதிதாசன்,மு.கு.நூ, ப. 91.)

கட்சி அமைத்து அக்கட்சியின் கொள்கையாக 'குறிஞ்சித் திட்டை விடுதலை செய்தல், உடைமை பொதுவாய்ச் செய்தல்' என அறிவிக்கின்றான். அதனோடு மட்டுமல்லாமல் கட்சிக்குள் மக்களை ஈர்ப்பதற்காக முதலில் ஆலைத் தொழிலாளரையும், பின்னர் சிதறிக்கிடக்கும் பயிர்த் தொழிலாளிகளையும், அடுத்து சிறு நிலைவுடைமையாளர்களையும் நான்காவதாக தம் கருத்துக்கு இசைவான அயலாரையும் அணுக வேண்டும் எனச் செயல் திட்டம் வகுக்கிறான். கட்சிக்கென கொடியையும் அமைக்கிறான்.

**எதிரிகளிடம் எச்சரிக்கையுடன் இருத்தல் பற்றிய செய்திகள்**

ஒரு நாட்டில் புரட்சியை முன்னடத்தல் செய்கின்றவான தலைவர்கள் அவருடன் சேர்ந்தவர்கள் எதிரி பெண்ணாயின் அப்பெண்ணே ஒழுக்கக்கேடும் வஞ்சனையும் உடையவளாயின் அவள் வலையில் வீழ்வதற்கான வாய்ப்புண்டு. என்பதை புரட்சிக் கவிஞர்,

"நம்மனோர் மிகவிழிப்போ டிருக்க வேண்டும்
நாம் இதிலே இருசெய்தி அறிய வேண்டும்
அம்மாதர் பலவஞ்சம் புரிதல் கூடும்
அவ்வையால் விழிப்புடன் நாம் இருக்கவேண்டும்
இம்மண்ணில் ஆடவர்க்குப் பெண்ணென் றாலே
எ∴குமனம் மெழுகாகும்! அதிலும் அப்பெண்
செம்மையுற இளமைஎழில் பெற்றி ருந்தால்
திருக்குறிப்புத் தொண்டர்தாம் சேயி ழைக்கே!"(மேலதுநூல்,பக். 90-91.)

என்று எச்சரிக்கை செய்கின்றார்.

**ஒற்றாடல் பற்றிய செய்திகள்**

அடுத்த நிலையில் பகைவரின் நடவடிக்கையைக் கண்டறிவது இன்றியமையாததாகும். இந்நிலையில் இதற்கேற்ப புரட்சிக்கான செயல்முறைத் திட்டங்களை வகுக்கமுடியும். இதனை அடுத்து அயல்நாட்டுக்காரியான விநோதையின் நடவடிக்கைகளைக் கவனிக்க தோழர்கள் சிலரை நியமிக்கின்றான் சேந்தன்.

**தனிமனிதக் கொலையைத் தடுத்தல் தொடர்பான செய்திகள்**

புரட்சியின் எழுச்சிக்காலம் கனியும் வரை காத்திருத்தல் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். காலம் கனியுமுன் ஆத்திரத்தால் தனிமனிதக் கொலை செய்ய முற்படுவது அமைப்பு முறையை மாற்ற உதவாததுடன் புரட்சியின்

எழுச்சிக்கும் குந்தகமாகவும் அமையும் விநோதையை ஆதரிக்கும் அரசனைக் கொல்ல செழியன் முற்பட்டபோது சேந்தன்,

“பனங்காயைப் பதம் பார்த்து வெட்டவேண்டும்
பத்துக்கோர் ஆறான விடுக்கா டேனும்
இனமக்கள் பழம்போக்கில் மாற வேண்டும்
இருளுளத்தில் நல்லுணர்வு பிறத்தல் வேண்டும்
அனைவரும் நம்செயலை ஒப்ப வேண்டும்” (மேலதுநூல்,பக்.114-115.)

என்று கூறி அமைதிப்படுத்துகிறான்.

**பிரித்தலும் பிரித்தார் பொருத்தலும் பற்றிய செய்திகள்**

தாம் தமிழராக இருந்தும் ஆரியச் சூழ்ச்சிக்குப் பலியாகி அவர்களுடன் சேர்ந்து தமிழினத்திற்கு எதிரியாக இருந்தற்கு வருந்தும் சென்னைத் தமிழர் அம்புயம் தம்பிரான் இருவரும் மனந்திருந்துகின்றனர். இளவரசன் இளந்திரையனையும், அவன் மாமன் திண்ணனையும் தன் உதவியுடன் விநோதை கொன்றதைப் புரட்சியாளர்க்கு அறிவித்து அவர்க்குத் துணை செய்கிறான் அம்புயம். அவள் பெயரிலும் பிறர்மொழி ஆகாதென என நினைத்து தன் பெயரை அழகு தமிழில் அல்லி என்று மாற்றிக்கொள்ள வேண்டுகிறான் சேந்தன்.

**பகைவரின் சூழ்ச்சியைப் புரட்சிக்கு ஆதராவாகப் பயன்படுத்திய செய்திகள்**

வீரமும் கொப்பளிக்கும் உணர்வும் உடைய செழியனை வேலை நிறுத்தம் செய்துவரும் தொழிலாளர் சார்பில் பேச வருமாறு அரசன் அழைப்பதாய்ப் பொய்யுரைத்துத் தன் வலையில் வீழ்த்தி விடுகிறாள் விநோதை. அவனைக் கொண்டு சேந்தனை வீழ்த்த நினைத்த அவளின் சூழ்ச்சிப் பலிக்காமல் போகவே சேந்தனுக்கும் வலை விரிக்கிறாள். இதிலும் தோற்கும் விநோதை. தன்னைக் கற்பழிக்கமுயன்றதாகப் பொய்க்குற்றம் சுமத்தி அரசன் வாயிலகச் சேந்தனை கொன்றுவிட ஏற்பாடு செய்கிறாள். மக்கள் தலைவராக உருவாகும் வேலன். நெடுமாறன், படைத்துணைத் தலைவன் முதலானோர் கிளர்ந்தெழு ஆயத்தமாய் இருந்தும், தனது இறப்பு புரட்சிக்கான காலத்தை விரைவில் கனிவிக்கும் என்று கருதி அரசன் விதித்தத் தண்டனையை ஏற்கிறான் சேந்தன். அதே நேரத்தில் இவ்வாய்ப்பை, மக்கள் நடுவில் அரசனையும் விநோதையின் சூழ்ச்சியையும் அம்பலப்படுத்த பயன்படுத்திக் கொள்கிறான். இதனால் படைவீரரும் மக்களும் அரசனுக்கு எதிராக உணர்வு பெறுகின்றனர். புரட்சியாளர்களும் ஒன்று திரள்கின்றனர்.

**புரட்சியை ஒரு சில காரணங்களுக்காக ஒத்தி போடும் செய்திகள்**

சேந்தன் இறந்த இல்லத்தில் தன்னை மணக்க திட்டமிடும் விநோதைக்குச் செவிசாய்க்கிறான் செழியன். புரட்சிப்படை தாக்க ஆயத்தமாக இருந்தும், புரட்சிக்கான காலத்தை அறிவிக்கத் தன்னை நம்பி வந்த சேந்தன் ஒப்படைத்த கணையாழியை, புரட்சி வராமல் தடுக்கவும், திருமணம் நடக்க அனுமதிக்கவும் பயன்படுத்திக் கொள்கிறான். இவ்வாறு வஞ்சத்திற்குத் துணைபோன செழியனின் இழிபண்பைக் குறிப்பிடும்போது,

“புலனை வென்றவன் வீரன் நலதுற
நம்பிய நாட்டை நட்டாற்று விட்டு
மறுபுலப் பொதுமகள் மலரடி வீழ்வது
பேடிமை அன்றோ பேடிமை அன்றோ!” (மேலது நூல், ப.175)

என்று சில்லியின் வாயிலாகச் சாடுகிறார் புரட்சிக்கவிஞர்.

**குறிஞ்சித் திட்டில் பெண் பட்டாளங்களின் செயல்பாடுகள்**

அரசி மல்லிகையின் மறைவுக்குப் பிறகு அவள் தோழி தாமரை நாட்டிற்குத் தொண்டு செய்தலே தன்கடன் எனத் துணிந்து நடைகெட்ட (தரம்கெட்ட) விநோதையின் கொடுமையான செயலைகளைக் களைவதற்கு ‘தமிழரே எழுவீர்’ என்று எழுகிறாள். அவளோடு பத்தாயிரம் பெண்கள் அடங்கிய பட்டாளம் எழுந்து சென்றன.

புரட்சிக்கவிஞரின் பார்வையில் புரட்சி வெற்றியடைய வேண்டுமானால் மக்கள் தொகையில் சரிபங்கினரான பெண்கள் தரப்பிலிருந்து பங்குகொள்ள வேண்டும். பெண்களின் இத்தகைய பங்களிப்பே புரட்சியைக் கைகூட உதவிற்று என்பார். இலெனின் வியட்நாம் நாட்டு விடுதலையிலும் பெண்களின் பங்கு பெரிதும் உண்டு. இதுபோன்று விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்ற பாலஸ்தீனம், இலங்கையிலும் பெண்களின் பங்கு காணப்பட்டன என்பது மெய்மையேயாகும்.

**புரட்சி வென்ற செய்திகள்**

குறிஞ்சித் திட்டில் சரிபாதியினர் உழைப்பாளர் கட்சியினர். படைவீரர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இக்கட்சிக்கு ஆதரவாளர். நூறு ஆயிரம் மக்கள் படைவீரர் உள்ளனர். துப்பாக்கிகளும் உள்ளன. படைக்கொட்டிலின் கருவிகளையும் கைப்பற்றிவிட்டனர். இந்நிலையில் விநோதையைத் தாமரை ஈட்டியைப் பாய்ச்சிக் கொன்றழிக்கிறாள். உழைப்பாளர் புரட்சி வெல்கின்றது.

**எதிரிகளுக்குத் தண்டனை வழங்கும் செய்திகள்**

எதிரிக்குக் கையாளாகி நம்பிக்கை மோசம் செய்த செழியன் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. அவன் தன் பிழையை ஒப்புக்கொண்டு கடலில் வீழ்ந்து மடிகிறான். அரசன் மீது அடுக்கடுக்கான குற்றம் சுமத்தப்பட அவன் நாணித் தளர்ந்து உயிர் துறக்கிறான். தப்ப நினைக்கும் சிவாநந்தன், சிவசம்பந்தன் முதலானோர் சிறைபிடிக்கபடுகின்றனர்.

**மன்னராட்சி நீங்கி மக்களாட்சி நிறுவுதல் பற்றிய செய்திகள்**

அரச பதவியை நீக்கப்பட்டு மக்கள் சரிநிகர் என்பதைச் ஏற்படுத்த வேண்டும் என்கிறான் நெடுமாறன். அல்லன அழித்தல், செல்வம் சேர்த்தல், செந்தமிழ் காத்தல், மதம் அகன்ற சாதி மறைந்த அரசு கடந்த வாழ்க்கை அமைத்தல் கடன் என அமைச்சன் வாயிலாக வற்புறுத்துவார் கவிஞர். நெடுமாறன், அமைச்சர் அறிவழகன் கூறும் கருத்தோடு குறிஞ்சித் திட்டு குறும்புதினம் நிறைவுபெறுகிறது.

**முடிவுரை**

குறிஞ்சித்திட்டில் ஆரிய பெண்ணான விநோதையின் செயல்பாடுகள் தமிழர்களுக்குப் பொருந்தாத காரணத்தால், தமிழ்மொழியின் மீது கொண்ட பற்றும், ஆரிய மாயையின் செயல்பாடுகளைக் களைந்தெரிவேண்டும் என்ற தமிழர்களும் எண்ணமும் உழைப்பாளர்களும் எதிர்ப்புச் சிந்தனைகளும் மக்கள் புரட்சி வித்திடன என்பது புலனாகும்.

**துணைநின்ற நூல்கள்**


1. பாரதிதாசன் - குறிஞ்சித் திட்டு, பாரிநிலையம், 184.பிராட்வே. சென்னை. 600 108, ஐந்தாம் பதிப்பு 1985.
2. பிரடெரிக் எங்கெல்ஸ் - குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், (தமிழ் மொழிபெயர்ப்பு, நா. தர்மராஜன்), முன்னேற்றப் பதிப்பகம், சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது. நான்காம் பதிப்பு 1990.